இப்படி தலித் பிரிவினர் தொகுதியில் முதலிடம் பிடித்தாலும், வன்னியர், கொங்கு கவுண்டர், உடையார், பிள்ளை, நாயக்கர், நாட்டார், முதலியார் போன்ற ஜாதியினர் அடுத்தடுத்த இடம் பிடிக்கின்றனர்.

இது ஒரு புறமிருக்க... கடந்த சில தினங்களுக்கு முன், தேர்தலில் சீட் கேட்டு பணம் கட்டியவர்களிடம் தி.மு.க. தலைமை நேர்காணல் செய்தது. அப்போது, விழுப்புரம் அமைச்சர் பொன்முடியின் ஆதரவோடு கடலூர் முன்னாள் தி.மு.க. எம்.பி. ஆதிசங்கர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். இதில் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் ஆதரவோடு மோதிய சேலம் மாநகர து.செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கத்திற்கு சீட் கிடைக்கவில்லை. ஆதிசங்கர் முதலியார் சமுதாயத்தைச் சேர்ந்தவர். தற்போதைய கள்ளக்குறிச்சி எம்.பி. தொகுதியில் பழைய கடலூர் தொகுதியில் இருந்து ரிஷிவந்தியம், சங்கராபுரம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகள் மட்டுமே வருகின்றன என்பது இவருக்குப் பலம். என்றாலும் சேலம் மாவட்டத்தில் உள்ள ஆத்தூர், கங்கவல்லி, ஏற்காடு ஆகிய தொகுதிகள் பலவீனம். அதேபோல சின்ன சேலம் எம்.எல்.ஏ. உதயசூரியன் இவருக்காக ஓடியாடி வேலை செய்வது ப்ளஸ்! ஆத்தூர், கங்கவல்லி தி.மு.க. நிர்வாகிகள் முடங்கிக் கிடப்பது மைனஸ். தற்போது தி.மு.க. தலைமைத் தொகுதிப் பொறுப்பாளராக அமைச்சர் பொன்முடியை அறிவித்திருக்கிறது. பொன்முடி களத்தில் கலக்குகிறார்.



பிரச்சாரத்தில் கொங்கு வேளாளர்...

இந்நிலையில் நாம் தி.மு.க. வேட்பாளர் ஆதிசங்கரிடம் பேசினோம். "எனக்கு எதிர்ப்பு அலை வீசுவதாக எதிர்க்கட்சியினர் பொய்யான தகவலைப் பரப்பி வருகின்றனர். ஆனால் என்னுடைய வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. கருமந்துறை பகுதியில் அதிக அளவில் கடுக்காய் விளைகிறது. அங்கே தொழிற்சாலை அமைக்க ஏற்பாடு செய்வேன். பாக்கு விவசாயத்தில் நலிவடைந்த விவசாயிகளுக்கு மத்திய அரசின் நிவாரண உதவி கிடைக்க நடவடிக்கை எடுப்பேன்" என்றார்.

கொங்கு நாடு முன்னேற்றப் பேரவையின் சார்பில் அக்கட்சியின் மாவட்டச் செயலாளர் டி.கே.எஸ்.ரமேஷ் களம் இறக்கப்பட்டுள்ளார். கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதியைப் பொறுத்தவரை கவுண்டர் சமுதாயத்தைச் சேர்ந்தவர் மருந்துக்கும் அ.தி.மு.க.வில் இல்லை என்பதால், டி.கே.எஸ்.ரமேஷ் வாங்கும் அனைத்து வாக்குகளும் தி.மு.க.வைச் சேதப்படுத்தும் ஆபத்து இருக்கிறது.

அதேபோல உடையார் வாக்குகளைக் குறிவைத்து லட்சிய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் விஜய டி.ராஜேந்தர் களம் இறங்கியிருக்கிறார். கள்ளக்குறிச்சியின் தே.மு.தி.க. வேட்பாளராக விஜயகாந்தின் மைத்துனரும், கட்சியின் மாநில இளைஞர் அணி செயலருமான எல்.கே.சுதீஷ் போட்டியிடுகிறார். கடந்த சட்டமன்றத் தேர்தலில் இந்த பாராளுமன்றத்திற்கு உட்பட்ட சட்டமன்றத் தொகுதிகளில் சுமார் 93,000 வாக்குகளை தே.மு.தி.க. பெற்றது இவருக்குச் சாதகம். கேப்டனும், அவர் மனைவியும் இங்கே சுதீஷுக்காக சூறாவளிப் பிரச்சாரம் செய்கிறார்கள்.

நாம் தே.மு.தி.க. வேட்பாளர் சுதீஷிடம் பேசினோம். "நான் வேலூரில் போட்டியிடுவதாக இருந்தேன். ஆனால் 'கள்ளகுறிச்சியில் போட்டியிட வேண்டும்' என்று 50க்கும் மேற்பட்ட மனுக்களைக் கொடுத்தனர். அதனால் இங்கே போட்டியிடுகிறேன். நான் வெற்றி பெற்றால் கல்லாறு அணைத் திட்டத்தை நிறைவேற்றுவேன். மலைக் கிராமங்களுக்கு சாலை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளைச் செய்து தருவேன். தற்போது எனது வெற்றிவாய்ப்பு 50 சதவீதமாக உயர்ந்துள்ளது" என்றார்.

அ.தி.மு.க. கூட்டணியில் பா.ம.க.வுக்கு சீட் ஒதுக்கப்பட்டு, திண்டிவனம் எம்.பி. தனராசு போட்டியிடுகிறார். அதிகம் படித்தவர், வன்னியர்கள் ஓட்டு, அ.தி.மு.க. கூட்டணி என்ற முப்பலத்தில் நிற்கிறார். பா.ம.க. எதிர்ப்பு வாக்குகளை பலரும் பிரிப்பதால் வெற்றி கிடைக்கும் என்று கருதுகிறார். ஆனால் கள்ளக்குறிச்சி உள்ளிட்ட சில யூனியன் பகுதிகளில் பா.ம.க.வினரின் முரட்டுத்தனம் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

நாம் ஏற்காடு பகுதியில் வாக்குச் சேகரித்துக் கொண்டிருந்த தனராசுவிடம் பேசினோம். "யாரும் மறுப்புத் தெரிவிக்காமல் ஒருமித்தக் கருத்துடன் என்னை வேட்பாளராகத் தேர்ந்தெடுத்தனர். ரிஷிவந்தியம், கள்ளக்குறிச்சி, சின்னசேலம் பகுதியில் நான் நன்கு அறிமுகம் ஆனவன். தொகுதியில் மாதம் 5 முறைக்கு மேல் சுற்றுவேன். வெயில் என்றும் பாராமல் பாடுபடுவேன். அதனால்தான் பார்க்க கருப்பாக இருக்கிறேன். ஆனால் சிலர் கருப்பாக இருந்து, சிவப்பாக மாறியிருக்கின்றனர். என் சட்டையைப் பிடித்து நீங்கள் உரிமையோடு என்னிடம் எதுவும் கேட்கலாம். இந்தத் தொகுதியை முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுப்பேன்" என்றார் உறுதியாக.